(**CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE**)

**IN THE COURT OF THE I ADDL.DISTRICT COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS**

அசல் வழக்கு எண்.388/2019 வா.சா.1

Name : சந்திரா
Father's name :
Village :
Taluk :
Caste :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 01.09.2022.

முதல் விசாரணை:-

நான் இந்த வழக்கின் வாதி. இத்துடன் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். 04.03.2013 ம் தேதியிட்ட P.சௌந்தரராஜன் என்பவருடைய இறப்புச்சான்று அசல் **வா.சா.ஆ.1**. வாரிசு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.2**. 26.05.1975 ம் தேதியிட்ட அழகர்சாமி வகையறாவிடமிருந்து தாவா 1 ஆம் லக்கச் சொத்தை எனது தகப்பனார் சௌந்தரராஜன் கிரையம் பெற்றார் மேற்படி கிரையப்பத்திரத்தின் சான்றிடப்பட்ட நகல் **வா.சா.ஆ.3**. 10.08.1987 ம் தேதியிட்ட எனது தகப்பனார் பாண்டி என்பவரிடம் தாவா 2 ம் லக்கச் சொத்தை கிரையம் பெற்றார். மேற்படி கிரையப்பத்திரத்தின் சான்றிடப்பட்ட நகல் **வா.சா.ஆ.4**. 09.11.1987 ம் தேதியிட்ட தாவா 3 ம் லக்கச் சொத்தை கடந்த 09.11.1987 ல் திருமலை வகையறாவிடம் எனது தகப்பனார் கிரையம் பெற்றதற்கான கிரையப்பத்திரத்தின் S.R.O.நகல் **வா.சா.ஆ.5**. தாவா 4 ம் லக்கச் சொத்தை கடந்த 27.04.1988 ம் தேதியன்று கிருஷ்ணன் வகையறாவிடம் எனது தகப்பனார் கிரையம் பெற்றதற்கான கிரையப்பத்திரத்தின் S.R.O. நகல் **வா.சாஆ.6**. தாவா 5 ம் லக்கச் சொத்தை 17.02.1999 ம் தேதியன்று ராசு வகையறாவிடம் எனது தகப்பனார் கிரையம் பெற்றதற்கான கிரையப்பத்திரத்தின் S.R.O. நகல் **வா.சா.ஆ.7**. தாவா 6 ம் லக்கச் சொத்தை 19.05.1993 ம் தேதியன்று திரு.கண்ணையா என்பவரிடமிருந்து என் தகப்பனார் கிரைமயம் பெற்றதற்கான கிரையப்பத்திரத்தின் S.R.O. நகல் **வா.சா.ஆ.8**. தாவா ஏ ஷெடியூலில் கண்டுள்ள 7 முதல் 9 லக்கச் சொத்துக்களை பொறுத்து எனது தகப்பனாருக்கு அவரது தகப்பனாரான A.பெருமாள் என்பவர் 17.10.2017 ம் தேதியன்று எழுதிக் கொடுத்த தானசெட்டில்மெண்டு பத்திரத்தின் S.R.O.நகல் **வா.சா.ஆ.9**. மேற்படி சௌந்தரராஜன் பெயரில் ஏற்பட்ட கிரையப்பத்திரங்கள் மற்றும் செட்டில்மெண்டு பத்திரம் குறித்து சௌந்தரராஜன் பெயரில் ஏற்பட்ட பட்டாக்கள் நகல்கள் **வா.சா.ஆ.10**. எங்கள் பெயரில் ஏ ஷெடியூல் சொத்துக்களை பொறுத்து எற்பட்ட கூட்டுப்பட்டா நகல் **வா.சா.ஆ.11**. தாவா

பி ஷெடியூல் சொத்தினைப் பொறுத்து 27.12.1989 ம் தேதியன்று கேசவராவ் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றதற்கான கிரையப்பத்திரத்தின் நகல் **வா.சா.ஆ.12**. 07.12.1980 ம் தேதியிட்ட தாவா சி ஷெடியூல் சொத்தினை எனது தகப்பனார் தானப்பன் வகையறாவிடமிருந்து கிரையம் பெற்றார். மேற்படி கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.13**. 23.01.1974 ம் தேதியிட்ட எனது தகப்பனார் ஏற்படுத்திக் கொண்ட பாகப் பிரிவினைப்பத்திரத்தின் அசல் **வா.சா.ஆ.14**. தாவாச் சொத்துக்களுக்கு வீட்டுவரி இரசீதுகள் **வா.சா.ஆ.15 வரிசை (எண்ணிக்கையில் 9)**. சொத்துவரி மற்றும் செலுத்தியதற்கான இரசீதுகள் மற்றும் கேட்புஅட்டை **வா.சா.ஆ.16 வரிசை (எண்ணிக்கையில் 15)**. மின்கட்டணம் செலுத்தியதற்கான இரசீதுகள் **வா.சா.ஆ.17 வரிசை (எண்ணிக்யையில் 43)**. தொலைபேசி கட்டணம் செலுத்தியதற்கான இரசீது **வா.சா.ஆ.18 வரிசை (எண்ணிக்கையில் 2)**. மதுரை மாநகராட்சியால் 01.10.1998 ம் தேதியன்று வழங்கப்பட்ட சொத்துவரி கேட்பு அறிவிப்பு **வா.சா.ஆ.19**. தாவா பி ஷெடியூல் சொத்தினை பொறுத்து 6 ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த 07.03.2019 ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் நகல் கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்டது **வா.சா.ஆ.20**. 27.06.2022 ம் தேதியிட்ட ராஜேஸ்கண்ணன் அவர்களுக்கு நான் எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரத்தின் கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.21**. (1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.ஆ.10, 11, 12 ஆகிய ஆவணங்கள் ஜெராக்ஸ் நகலாக குறியீடு செய்யப்பட்டதால் மேற்படி ஆவணங்களை குறியீடு செய்ய பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை செய்ததன் அடிப்படையில் குறியீடு செய்யப்பட்டது). (வழக்குநிலுவையில் இருக்கும் போது வா.சா.ஆ.21 ஆன ஆவணத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளதால் 1 முதல்5 பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை செய்ததன் அடிப்படையில் குறியீடு செய்யப்பட்டது). ஆகவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.